## 192 முதலமைச்சர்களின் படங்களை சட்ட மன்றத்தில் வைப்பதற்கு கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வரப்பெற்றுள்ளதா என்பது குறித்து



சார்ந்தவர்கள் விடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட கோரிக்கை ஏதாவது நம்முடைய அரசுக்கு வந்துள்ளதா என்பதை முதலமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்போதுதான் நம்முடைய உறுப்பினர் கோதண்டராமையா அவர்கள் பல உறுப்பினர்களிடத்தில் கையெழுத்து வாங்கி என்னிடத்தில் அளித்தார். முன்பு இருந்த குமாரசாமி ராஜா, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பிரகாசம் பந்துலு ஆகிய முதலமைச்சர்களின் படங்களை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதைப் பற்றி அரசு பிறகு ஆலோசிக்கும்.

### (6) நடைமுறைக் கேள்வி.

### விடைகளுக்கான திருத்த அறிக்கைகளைத் தாமதமாக அளித்தது குறித்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** Sir, on a Point of order. சற்று நேரத்திற்கு முன்புதான் மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள், தாம் ஏற்கனவே கொடுத்த பதிலுக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்தார்கள். ரூல் 82-ஏயில் In the same sitting or at any time thereafter என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிப்ரவரி, மார்ச் முடிந்து, அடுத்தாற்போல் ஒரு செஷனும் கூடியிருக்கிறது. இப்படியிருந்தும், உடனே திருத்தத்தைக் கொடுக்காமல் இப்போதுதான் கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி, 2, 3 வருடம் கழித்தும் கொடுக்கலாமா ? டைரக்டிவ் படி ஒன்று அந்த செஷனில் கொடுக்க வேண்டும், அல்லது அடுத்த செஷனிலாவது கொடுக்க வேண்டும் என்றால் நன்றாக இருக்கும். அப்படி இல்லை என்றால் எதை மறுக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. ஸ்பிரிட் ஆப் தி ரூலை பார்க்க வேண்டும் 'in the same sitting or at any time thereafter' என்று சொல்லப்பட்டிருப்பதை ஒட்டி, உடனடியாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

*1975 நவம்பர் 5]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவை மார்ச் மாதத்தில் கூடியதற்குப் பிறகு, அடுத்தாற்போல இப்போதுதான் கூடியிருக்கிறது. கூடுமானவரையில், எவ்வளவு விரைவில் கொடுகக முடியுமோ அப்படிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

இப்போது நாம் இந்த பில்களை எல்லாம் 5, 6 தேதிகளில் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, ஒரு பில்லுக்கு எவ்வளவு நேரம் என்று ஒதுக்கிக்கொண்டாலொழிய முடிக்க முடியாது. கைத்தறித் துணிகள் பில்லை 11 மணிக்குள் முடித்து விடலாமா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இது மிகவும் முக்கியமான பில்.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, பில்லை அனுசரித்து நேரம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது 10-30 மணி. 11½ மணிக்கு முடித்து விடுவோம்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

**(இ) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் எண் 19/74)—விவாதம்—தொடர்ச்சி.**

*** திரு. கி. ஜெயராமன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மசோதா ஆரம்ப காலத்தில் வந்த நேரத்தில், மத்திய அரசினர் இதை எதிர்த்தார்கள். ஆனால் இன்று அந்த நிலைமை மாறியிருக்கிறது. அவர்கள் கூட கொள்கை அளவில் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு நல்ல மாற்றத்தையும் நாம் பார்க்கின்றோம். அவர்கள்கூட கைத்தறித் தொழில் பாதுகாப்புக்காக ஒரு மசோதாவைக் கொண்டுவர எண்ணியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் அவர்கள் அந்த மசோதாவை எப்படிக் கொண்டுவரப் போகிறார்கள். எப்போது கொண்டு வரப்போகிறார்கள் என்று நாம் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.